495—

திருப்பத்தூர் வனச்சரகக் காடுகளில் சந்தன மரங்களை வெட்டி எடுத்தல்.

*21389—திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : மாண்புமிகு வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் வனச்சரகக் காடுகளில் உள்ள சந்தன மரங்கள் வெட்டி எடுக்கப்படாமல் அப்படியே வீணாகிறது. என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அவற்றை வெட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், வனத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): தமிழ்நாட்டில் காற்றில் விழுந்த சந்தன மரங்கள் மற்றும் காய்ந்துபோன சந்தன மரங்கள் அனைத்தும் வேருடன் களையப்பட்டு திருப்பத்தூர் சந்தனமர இறுதித் துலக்க கிடங்கிற்கு அனுப்பப்பட்டு வருகிறது மற்றும் காட்டிலுள்ள மோட்டு மற்றும் வேர்களும் தோண்டி எடுக்கப்பட்டு அரசுக் கணக்கில் கொண்டுவந்து கிடங்கிற்கு அனுப்பப்படுகிறது. எனவே, திருப்பத்தூர் வனச் சரகக் காடுகளிலுள்ள வெட்டி எடுக்கப்பட வேண்டிய சந்தன மரங்கள் வெட்டியெடுக்கப்படாமல் இதுகாறும் ஏதும் வீணாக வில்லை.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சந்தன மரங்களை வெட்டுவதற்கு, அகற்று வதற்கு ஏற்பட்டுள்ள செலவுகள் எவ்வளவு என அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989-90ல் இந்த அரசு 17.32 லட்சம் ரூபாய் செலவழித்தது. சென்ற ஆண்டு 1992-93ல் 137.17 லட்சம் ரூபாய் செலவழித்தது. 1993-94ல் 120 லட்சம் ரூபாய் ஒதுக்கிடு செய்யப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 496, திரு. கு. சீனிவாசன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

496—

மன்னார்குடி தொகுதியில் உள்ளிக்கோட்டை உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக உயர்த்துதல்.

*22350—திரு. கு. சீனிவாசன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1994 மே 3]

(அ) மன்னார்குடி தொகுதி, உள்ளிக்கோட்டை உயர் நிலைப்பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக உயர்த்தும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது உயர்த்தப்படும் ?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : அரசாணை எண் 782, கல்வித் துறை நாள் 17—8—1993 மூலம் உள்ளிக்கோட்டை உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்டுவிட்டது. எனவே, அடுத்த வினாவிற்கு இடமில்லை.

திரு. கு. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னார்குடி தொகுதியில் உள்ளிக்கோட்டை உயர் நிலைப் பள்ளியை இன்றையதினம் மேல்நிலைப் பள்ளியாக தமிழகத்தினுடைய காவல் தெய்வம், எங்களுடைய இதயதெய் வம் டாக்டர் புரட்சித் தலைவியின் ஆட்சிக் காலத்திலே அவர் களுடைய அனுமதியின்பேரில் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் மாற்றியமைத்துக் கொடுத்திருக்கிறார்கள். அதற்கு எங்களுடைய தொகுதியின் சார்பாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, அந்தப் பள்ளியில் அறிவியல் ஆய்வுக் கூடங்கள் இல்லாத காரணத்தால் அங்கே படிக்கின்ற மாணவ, மாணவியர்கள் தங்களுடைய பரீட்சைக்கு பிராக்டிக்கல் வகுப் பிலே கற்றுத் தேர்வு பெறுவதற்கு வாய்ப்பு இல்லாத சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால் அறிவியல் ஆய்வுக்கூடம் உடனடி யாக அமைப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலைமைகளை ஆராய்ந்து அரசு முடிவு எடுக்கும்.

திரு. கு. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிவியல் ஆய்வுக் கூடம் அமைப்பதற்கு நிலைமை களை ஆய்ந்து ஆவன செய்வதாக மாண்புமிகு அமைச்சர் அவர் கள் சொன்னார்கள். அதே வேளையில் அங்கே மேல்நிலைப் பள்ளியில் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் 4 பேர் நியமனம் செய்யப்பட வேண்டியிருக்கிறது. அறிவியல் ஆய்வுக்கூடம் அடுத்த நிதியாண்டில் ஆரம்பிக்கப்பட்டாலும், உடனடியாக அங்கே முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களை நியமிப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரும் கல்வியாண்டில் இது குறித்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 497 திரு கே. கந்தசாமி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

497—

சேலம் அருங்காட்சியகத்தை நவீனப்படுத்துதல்

*22613—திரு. கே. கந்தசாமி:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் அரசு அருங்காட்சியகத்தை பள்ளி மாணவ மாணவிகளை ஈர்க்கும் வகையில் நவீனப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சேலம் மாவட்ட அரசு அருங்காட்சியகத்திற்குப் போதிய வசதியுடன் கூடிய கட்டடம் கிடைக்கப் பெற்றதும் அதை நவீனப்படுத்த அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்.

முற்பகல் 11.00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப் படுகிறது.

திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அருங்காட்சியகம் செயல்படும் கட்டடம் நல்ல நிலையில்தான் உள்ளது. நல்ல கட்டடமாகத்தான் இருக்கிறது. ஆனால் அங்கே வரலாற்றுச் சிற்பங்கள் சேரன் செங்குட்டுவன் காலத்து சிற்பங்கள், ஓலைச் சுவடிகள், செப்புத் தகடுகள் போன்றவை எல்லாம் அந்த அருங்காட்சி யகத்திலே வைக்கப்பட்டுள்ளன. அந்தச் சிற்பங்கள் எல்லாம் கண்ணாடிப் பேழையில் வைக்கப்படாமல் வெறுமனே வைக்கப் பட்டுள்ளதால், அவை காலப்போக்கில் அழிந்துவிடும் சூழ் நிலை ஏற்பட்டுள்ளது. அவற்றை நல்ல நிலையில் பராமரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.